**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**O.S.No.75 /2021**

Deposition of witness **PW2** for Plaintiff and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Marimuthu | Father's Name | : Muniyappa |
| Age | : | Village | : |

**நாள்:10.02.2026.**

**வா.சா.2 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 3–ம் தரப்பினர் மற்றும் வாதி தரப்பு சாட்சி ஆவேன். வா.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் ஆமாம். அந்த அழைப்பாணையை காட்ட முடியுமா என்றால் வீட்டில் வைத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். வாதி, பிரதிவாதிகளை எனக்கு 20 வருடமாக நன்கு தெரியும். கிரய உடன்படிக்கை போட்ட போது நான் உடன் இருந்தேன். கிரய உடன் படிக்கைக்கு எவ்வளவு பணம் பிரதிவாதிக்கு வாதி கொடுத்தார் என்றால் ரூ.50,000 கொடுத்தார் பிறகு ரூ.1,50,000 கொடுத்தார். அக்ரிமென்ட் போடுவதற்கு முன்பு ரூ.50,000 வாதி பிரதிவாதிக்கு கொடுத்தார். அக்ரிமென்ட் அன்று ரூ.1,50,000 வாதி, பிரதிவாதிக்கு கொடுத்து கிரய உடன்படிக்கை தொகை ரூ.2,00,000 கொடுக்கப்பட்டுவிட்டது. கிரய உடன்படிக்கை தேதி என்ன என்றால் 28.10.2015 ஆகும். தாவா சொத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் நான்கு

எல்லைகள் தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கிரய உடன்படிக்கையில் நான் எத்தனாவது சாட்சி என்றால் நான் 1வது சாட்சி ஆவேன். 2வது சாட்சி யார் என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்யவேண்டும் என்ற என்னத்தில் கிரய உடன் படிக்கை எழுதிகொடுக்கவில்லை என்றும் கடனுக்காக தான் கிரய உடன் படிக்கை எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ராமபுரத்தில் குடியிருக்கிறேன். நான் வாதியிடம் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.